[பேரவைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படுமாயின் 5.2.1981 வியாழக் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

ஆ. அண்ணாமலை பல்கலைக் கழகப் பேரவை மூன்று உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (செனட்) இச் சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு என். ராமச்சந்திரன் (2) திரு என். சுப்பிரமணியன் (3) திரு. கே. சௌந்தரராஜன் ஆகியோரின் பதவிக்காலம், 1980 பிப்ரவரி மாதம் சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் விளைவாக முடிவடைந்துவிட்டதால், அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாட்களை 31.1.1981 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 2–2–1981 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 3.2.1981 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 5.2.1981 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

[முற்பகல் 10-50]

இ. கண்டனத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவையின் 71-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன :

'' மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழக அரசின் தொழிலாளர் விரோதத் கொள்கையை இப்பேரவை கண்டிக்கிறது'' என்று மாண்புமிகு